செ.வெ.எண். 10 நாள். 11.11.11

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் பள்ளிபாளையம் காவிரி ஆற்றின் கரையோரம் வசித்த 660 நபர்களுக்கு இலவச பட்டாக்களை வழங்கினார்.**

பள்ளிபாளையம் காவிரி ஆற்றின் கரையோரம் உள்ள ஜனதா நகர், சத்யா நகர், இந்திராநகர், ஜெ.ஜெ.நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 749 குடும்பங்கள் பாதுகாப்பற்ற நிலையில் வசித்து வந்தனர். வெண்டிப்பாளையத்தில் பவானி கட்டளை கதவணை - II நீர்மின் உற்பத்திக்காக நீர் தேக்கப்படும் நிலையில் இக்குடியிருப்புகள் மூழ்கும் நிலையிருந்தது. அரசின் சார்பில் இவர்களுக்கு பாதுகாப்பான இடங்களில் வசிக்கும் வகையில் இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பள்ளிபாளையம் கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் இன்று (11.11.2011) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் 660 நபர்களுக்கு ரூ.66 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி பேசியதாவது: வெண்டிப்பாளையத்தில் பவானி கட்டளை கதவணை - II நீர்மின் உற்பத்தி மூலம் 30 மெகாவாட், மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளது. மின்தேவை மிகவும் முக்கியமானது. இந்த மின் உற்பத்திக்காக நீரினை தேக்கும்போது பள்ளிப்பாளையம் காவிரி கரையோரம் வசிக்கும் 749 குடும்பங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பார்கள் என்பதால் இவர்களுக்கு பாதுகாப்பான மாற்று இடம் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டால் உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் மற்றும் பிற உதவிகளையும் செய்ய உத்தரவிட்டுள்ளார். இதன்படி 660 நபர்களுக்கு காடச்சநல்லூர், பாப்பம்பாளையம் ஆகிய பகுதிகளில் இடம் தேர்வு செய்யப்பட்டு இன்று இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 89 குடும்பங்களுக்கும் விரைவில் இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும்.

நடப்பாண்டில் இவர்களில் 350 குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் மதிப்பிலான வீடுகள் உடனடியாக கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இன்னும் 4 மாத காலத்திற்குள் புதிய வீடுகள் கட்டித்தரப்படும். மீதமுள்ளவர்களுக்கு அடுத்த நிதியாண்டில் வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏழை மக்கள் வாழ்க்கைத்தரம் உயர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். திட்டங்கள் அனைத்தும் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசு உறுதுணையாய் இருக்கிறது. இவ்வாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழாவிற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது: வெண்டிப்பாளையத்தில் பவானி கட்டளை கதவணை - II நீர்மின் திட்டம் துவங்கப்படவுள்ளது. இதற்காக நீரை தேக்கினால் 27 அடி அளவிற்கு நீர் தேங்கும். இதனால் பள்ளிபாளையம் காவிரி ஆற்றின் கரையில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படும். எனவே இப்பகுதியில் வசிப்பவர்கள இன்னும் வீடுகளை காலி செய்யவில்லையெனில் உடனடியாக வீடுகளை காலி செய்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும். இன்று 660 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 660 நபர்களுக்கு ரூ.66 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார். விழாவில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர், மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.கே.காந்திமுருகேசன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேலு, பள்ளிபாளையம் நகர்மன்றத் தலைவர் திரு.பி.எஸ்.வெள்ளியங்கிரி, பள்ளிபாளையம் ஒன்றியக்குழு தலைவர் திரு.எஸ்.செந்தில், பள்ளிப்பாளையம் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.டி.கே.சுப்ரமணியன் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.பி.என்.கந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி வரவேற்புரையாற்றினார். திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஆர்.கவிதா நன்றி கூறினார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.